பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

*08 09 2025* *MONDAY* *12.40 PM*

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாட்டின் பொருளாதாரம் சுயசார்பு மிக்கதாக இருக்க வேண்டியதன் அவசியத்தை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.
- அனைத்து வயதினருக்குமான ஆரோக்கியமான வாழ்விற்கு இயன்முறை மருத்துவம் அவசியம் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.
- ஜெர்மனி, இங்கிலாந்து நாடுகளில் தாம் மேற்கொண்ட பயணம், வெற்றியையும். மனநிறைவையும் தந்திருப்பதாக தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.
- ரஷ்யா – யுக்ரைன் மோதல் விரைவில் முடிவுக்கு வரும் என்று அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
- *CAFA* கோப்பை கால்பந்து போட்டியில் வெண்கலப்பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியா இன்று ஓமனை எதிர்கொள்கிறது.

-இனி விரிவான செய்திகள்-

<<<<<<<>>>>>>

நாட்டின் பொருளாதாரம் சுயசார்பு மிக்கதாக இருக்க வேண்டியதன் அவசியத்தை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் உள்ள பொறியியல் ஏற்றுமதி மேம்பாட்டுக் குழுமத்தின் 70-ஆவது ஆண்டு விழா கொண்டாட்ட நிகழ்வில் அவர் இன்று பங்கேற்று பேசினார்.

உலகளாவிய வர்த்தகம் மற்றும் அறிவுசார் மையமாக இந்தியா திகழ நாட்டு மக்கள் அனைவரும் பாடுபட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

கோவிட் பெருந்தொற்று காலக்கட்டத்தில் சுயசார்பு இந்தியா இயக்கத்திற்கான அடித்தளம் இடப்பட்டதாகவும், உலக அளவில் பொருளாதாரம் நலிவுற்ற நிலையிலும் நம் நாட்டு பொருளாதாரம் சிறப்புற அது காரணமாக அமைந்துள்ளதாகவும் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

மறைந்த இசைக் கலைஞர் *Bhupen Hazarika*-வின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி, அஸ்ஸாமின் குவஹாத்தியில் நடைபெற்ற அவரது பிறந்தநாள் நூற்றாண்டு கொண்டாட்ட நிகழ்வில் அம்மாநில ஆளுநர் திரு லஷ்மண் பிரசாத் ஆச்சாரியா, முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வ சர்மா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நூற்றாண்டு கொண்டாட்டம் தொடர்பாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், *Bhupen Hazarika*-வின் வாழ்வும், இசையும் கோடிக்கணக்கான மக்களுக்கு ஊக்கம் அளிப்பதாக உள்ளது என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

<<<<<<<>>>>>>

உலக இயன்முறை மருத்துவ தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இயன்முறை மருத்துவத்தின் முக்கியத்துவத்தை பரவலாக்கும் வகையிலும், இத்துறை சார்ந்த நிபுணர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது.

”மூத்த குடிமக்களின் ஆரோக்கிய வாழ்க்கையில் இயன்முறை மருத்துவத்தின் பங்களிப்பு” என்பது இந்த ஆண்டின் கருப்பொருளாகும்.

இந்நாளையொட்டி, மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், அனைத்து வயதினருக்குமான ஆரோக்கியமான வாழ்விற்கு இயன்முறை மருத்துவம் அவசியம் என்று குறிப்பிட்டுள்ளார்.

நாடு முழுவதும் மூத்த குடிமக்கள் ஆரோக்கியமான வாழ்வை மேற்கொள்ளும் வகையிலும், அவர்களது வாழ்க்கை தரம் சிறப்பாக இருப்பதை உறுதிபடுத்தும் வகையிலும் இயன்முறை மருத்துவத்தை அனைவரும் ஊக்குவிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

மூத்த குடிமக்களின் ஆரோக்கியத்தை காக்கும் வகையில், பல்வேறு மருத்துவ சேவைகளை வழங்கும் வகையிலான திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாகவும் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

இதனிடையே, தமிழகத்தின் சேலம் மாவட்டத்தை சேர்ந்த இயன்முறை மருத்துவர் திரு செந்தில் குமார், இயன்முறை மருத்துவர்களின் வழிகாட்டுதலோடு மூத்த குடிமக்கள் மேற்கொள்ளும் முறையான உடற்பயிற்சிகள் அவர்களது ஆரோக்கியத்தை உறுதி செய்யம் என்று எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

சர்வதேச எழுத்தறிவு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

டிஜிட்டல் யுகத்தில் எழுத்தறிவை ஊக்குவித்தல் என்பது இந்த ஆண்டின் மையக் கருத்தாகும்.

இந்நாளையொட்டி, மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் வெளியிட்டுள்ள செய்தியில், மக்களுக்கு அதிகாரமளிப்பதில் எழுத்தறிவு முக்கிய பங்கு வகிப்பதாக கூறியுள்ளார்.

சர்வதேச எழுத்தறிவு தினத்தையொட்டி, நாட்டின் அனைத்துப் பகுதிகளும் எழுத்தறிவு பெறுவது, அனைவரும் கல்வி மற்றும் திறன் மேம்பாடு அடைவது தொடர்பான உறுதிபாட்டை நாட்டு மக்கள் மேற்கொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய கல்விக்கொள்கையின் ஒரு பகுதியாக *Ullas* திட்டம் செயல்படுத்தப்படுவதாகவும், இது அடிப்படை எழுத்தறிவு மற்றும் திறன் மேம்பாட்டை ஏற்படுத்த துணை நிற்பதாகவும் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

இளையோர் வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாடு அடையும் வகையில் தனியார் நிறுவனம் ஒன்றுடன் மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை இன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

<<<<<<<>>>>>>

ஜெர்மனி, இங்கிலாந்து நாடுகளில் தாம் மேற்கொண்ட பயணம், வெற்றியையும், மனநிறைவையும் தந்திருப்பதாக தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமது பயணத்தை நிறைவுசெய்துவிட்டு இன்று சென்னை திரும்பிய அவர் செய்தியாளர்களை சந்தித்து பேசினார்.

தமிழகத்தில் வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும் வகையில் 33 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக முதலமைச்சர் கூறினார்.

ஓசூரில் முதலீட்டாளர் மாநாட்டில் பங்கேற்க இருப்பதாகவும் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

குஜராத் சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் இன்று தொடங்கியது.

மூன்று நாட்கள் நடைபெறவுள்ள இந்த கூட்டத்தொடரின் முதல் நாளான இன்று ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முதலமைச்சர் திரு பூபேந்திர பட்டேல் முன்மொழிந்து உரையாற்றுகிறார்.

இதனைத்தொடர்ந்து, நிதி, சுகாதாரம் உள்ளிட்ட துறைகள் சார்ந்த ஐந்து மசோதாக்கள் அவையில் தாக்கல் செய்யப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>

ஜம்மு காஷ்மீர் மற்றும் பீகார், கர்நாடகா, மகாராஷ்ட்ரா, உத்தரப்பிரதேசம், தமிழகத்தில் உள்ள 22 இடங்களில் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் இன்று காலை முதல் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

ஜம்மு காஷ்மீரில் பத்கம், குல்காம், பட்டன், புல்வாமா, கங்கன் பகுதிகளில் காவல்துறையினர் மற்றும் மத்திய ரிசர்வ் காவல்படையினருடன் இணைந்து தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் இச்சோதனையை மேற்கொண்டு வருகின்றனர்.

தீவிரவாத அமைப்புகளுக்கு நிதியுதவி செய்தது தொடர்பாக இச்சோதனை மேற்கொள்ளப்படுவதாக தேசிய புலனாய்வு முகமை தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>

ஜம்மு காஷ்மீரின் குல்காம் மாவட்டத்தில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது தீவிரவாதி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்த நடவடிக்கையின்போது ராணுவ வீரர் ஒருவர் காயமடைந்தார்.

அங்குள்ள Guddar வனப்பகுதியில் தீவிரவாதிகள் நடமாட்டம் இருப்பதாக கிடைத்த உளவு தகவல்களின் அடிப்படையில், மத்திய ரிசர்வ் காவல் படையினர், ஜம்மு காவல்துறையினருடன் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும், அப்போது மறைந்திருந்த தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதாகவும் ராணுவம் தெரிவித்துள்ளது.

அங்கு துப்பாக்கிச்சூடு தொடர்ந்து நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>

ரஷ்யா – யுக்ரைன் மோதல் விரைவில் முடிவுக்கு வரும் என்று அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த விவகாரம் தொடர்பாக, பேச்சுவார்த்தை மேற்கொள்வதற்காக ஐரோப்பிய தலைவர்கள் அமெரிக்கா வரவிருப்பதாக கூறினார்.

மேலும், ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புதினுடன் இதுகுறித்து தாம் பேசி வருவதாகவும் திரு டொனால்டு ட்ரம்ப் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

*CAFA* கோப்பை கால்பந்து போட்டியில் வெண்கலப்பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியா இன்று ஓமனை எதிர்கொள்கிறது.

தஜிகிஸ்தானின் *Hisor*-ல் மாலை ஐந்தரை மணிக்கு இப்போட்டி நடைபெறவுள்ளது.

<<<<<<<>>>>>>

உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் *Abinash Jamwal* காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் பிரிவு முதல் சுற்றில் அவர், மெக்சிகோவின் *Hugo Barron*-ஐ வென்றார்.

<<<<<<<>>>>>>

உலக சீனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் *Sridevi Gadhili* இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<<<<<<<>>>>>>